**செ. கு. எண்**: 1 **நாள்**: 02.01.2012

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரங்கற் செய்தி – 2.1.2012**

பிரசித்திப் பெற்ற பழம்பெரும் பரதநாட்டிய கலைஞரும், எனக்கு பரதநாட்டியம் பயிற்றுவித்த குருவுமான திருமதி கே.ஜெ. சரசா அவர்கள் இன்று உடல் நலக் குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தி அறிந்து ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மன வேதனையும் அடைந்தேன்.

எனது மற்றுமொரு குருவான பத்மஸ்ரீ திரு. கே.என். தண்டாயுதபாணி பிள்ளை அவர்களின் குடும்பத்தின் வழிவந்தவரும், திரு. வழுவூர் ராமையா பிள்ளை அவர்களின் சீடருமான திருமதி கே.ஜெ. சரசா அவர்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக பரதநாட்டியக் கலையில் ஈடுபட்டு, பல்வேறு பரதநாட்டிய கலைஞர்களை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், முதல் பெண் நட்டுவனார் என்ற பெருமையையும் பெற்றவர். பரத நாட்டியத்தில் 500–க்கும் மேற்பட்ட அரங்கேற்றங்களையும், 1,500–க்கும் மேற்பட்ட பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் உலகம் முழுவதும் நடத்தி, பரதக் கலையை பரப்புவதில் முக்கியப் பங்கு வகித்தவர் திருமதி சரசா அவர்கள். ''கலைமாமணி'', ''நாட்டிய செல்வம்'', ''ஸ்வர்ண கலசம்'', ''நாட்டிய ரத்னா'', ''நிருத்திய ரத்னா'', ''நாட்டிய கலா சக்கரவர்த்தி'', ''நாட்டிய கலா சிகாமணி'' உட்பட பல்வேறு விருதுகளை பெற்றதோடு மட்டுமல்லாமல், சங்கீத நாடக அகாடமி விருதான சிறந்த பரத நாட்டிய ஆசிரியர் என்ற விருதினையும் பெற்றவர்.

திருமதி கே.ஜெ. சரசா அவர்களின் இழப்பு நாட்டியக் கலையில் ஈடுபட்டுள்ளோருக்கு மிகப் பெரிய இழப்பாகும். இந்தத் துறையில் இவர் ஆற்றிய பணி அளப்பரியது.

திருமதி சரசா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆன்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**